நாள்: 01.04.2025

O.S . 193/2022 J/W 194/2022

பெயர் சாதிக்ராஜா

வா.சா. 1

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். வட்டிக்கு கொடுக்கும் பழக்கம் கிடையாது. பிரதிவாதிகள் எனது உறவினார்களா என்றால் நண்பர்கள். அவர் மீன் கடை வைத்திருந்தார்கள் அதன் மூலமாக பழக்கம். நான் கம்பம் பகுதியில் கந்துவட்டிக்கு தொழில் செய்து வரும் நபர் என்றும் என்னை அங்கு கந்துவட்டி சாதிக் என்று தான் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மட்டும் தான் புகார் கொடுத்துள்ளார்கள். வேறு நபர்கள் கொடுக்கவில்லை. 2 ம் பிரதிவாதி யாசிக் அகமதை நான் வட்டி கேட்டு மிரட்டி அவர் மனம் முடைந்து தற்கொலைக்கு முயன்றார் என கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு. அந்த வழக்கு தற்பொழுதும் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் தான் இருந்து வருகிறது. 04.03.2021,ல் ஒரு ரூ8 லட்சமும், 11.03.2021 ல் ரூ.8 லட்சமும் மொத்தம் ரூ16 லட்சம் என்னிடம் கடன் வாங்கியுள்ளார். 04.03.2021 ல் ஒரு புரோநோட்டும், 11.03.2021 ல் ஒரு புரோநோட்டும் இரண்டு புரோநோட்டுகள் எழுதிக்கொடுத்தார்கள். மேற்படி இரண்டு புரோநோட்டிகளையும் பரமராஜ் என்பவர் பூர்த்தி செய்தார். புநோட்டுகளை பரமாராஜ் எனது வீட்டில் வைத்து தான் இரண்டு புரோநோட்டுகளையும் எழுதினார். இரண்டு புரோநோட்டுகளிலும் முதலாவது சாட்சியாக யாசித் அகமது மனைவியும், 2 வதுசாட்சியாக அய்யனார் என்பவர் சாட்சிக் கையெழுத்து போட்டுள்ளார். அய்யனார் என்பவர் எனது தம்பியின் நண்பர் ஆவார். 04.03.2021 ல் அவர் தற்செயலாக வந்தார். சாட்சி யையொப்பம் போட்டார். அப்பொழுது 11.03.2021 ல் மீண்டும் ரூ.8 லட்சம் பிரதிவாதிகளுக்கு கொடுக்க போவதாகவும் அதற்கும் அய்யனார் வரவேண்டும் என நானும் சொன்னேன். பிரதிவாதிகளும் சொன்னார்கள். அதனால் மீண்டும் வந்தார். அய்யனார் என்பவர் யார் என்றே பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும் அவர் எனக்கு வேண்டிய நபர் என்பதால் வழக்கு புரோநோட்டுகளை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு புரோநோட்டுகளும் வெவ்வேறு தேதிகளில் தான் எழுதப்பட்டது. மேற்படி இரண்டு புரோநோட்டுகளிலும், கதவு எண்.5, மியாகான் தெரு என்பது அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு புரோநோட்டுகளும் மேற்படி மியாகான் தெரு என்பது 04.03.2021 லும் அதன் பின்னர் 11.03.2021 லும் வெவ்வேறு தேதிகளிலும் தான் திருத்தப்பட்டுள்ளது. வெவ்வேறு தேதிகளில் புரோநோட்டு எழுதப்பட்டிருந்தார் ஒரே தவறு மீண்டும் மீண்டும் ஏற்பட வய்ப்பு இல்லை என்றும். இரண்டு புரோநோட்டுகளையும் நான் ஒரே தேதியில் தான் எழுதினேன். செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு புரோநோட்டுகளும் நஸ்ரின் கையொப்பம் போட்ட பேனா ஒரே பேனா என்றால் சரியல்ல. வெவ்வேறு பேனாக்கள் ஆகும். அதேபோல் இரண்டு புரோநோட்டுகளும் அய்யனார் கையொப்பம் போட்ட பேனா ஒரே பேனா என்றால் சரியல்ல. வெவ்வேறு பேனாக்கள் ஆகும். இரண்டு புரோநோட்டுகளையும் ஒரே ே ததியில் எழுதியுள்ளதால் தான் ஒரே பேனாவை வைத்து கையொப்பம் போட்டார்கள் என்றால் சரியல்ல. அவர்அவர்கள் அவர்களுடைய தனித்தனியான பேனாவை வைத்து கையொப்பம் போட்டார்கள். இரண்டு புரோநோட்டுகளிலும், முதலில் யாகூப் ஹாசன் கையொப்பம் போட்டார். இரண்டாவதாக

யாசித் அகமது கையொப்பம் போட்டார். அவர்கள் இந்த வரிசையிலும், ரெவின்யூ ஸ்டாம்பிலும் அதற்கு கீழும் இரண்டு கையொப்பம் போட்டார்கள். புரோநோட்டில் உள்ள முதலில் உள்ள யாகூப் ஹாசன் கையொப்பம் அவருடையது அல்ல என்றும் நான் வழக்கிற்காக அதனை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டு புரோநோட்டுகளிலும் தமிழ்த் தேதி போடாத காரணம் ஒரே நாளில் புரோநோட்டை உற்பத்தி செய்ததால் தான் போடவில்லை. எழுதிய பரமராஜை தான் அதை கேட்க வேண்டும். புரோநோட்டில் இரண்டாவது வரிபிளப்பு என எழுதியிருப்பது வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி யாதிச் அகமது என்னிடம் ரூ6 லட்சம் கடன் பெற்றார் அதற்காக அவர் மட்டும் எழுதிக்கொடுத்த புரோநோட்டுகள் தான் வழககு புரோநோட்டுகள் என்றால சரியல்ல. 2012 முதல் 2016 வரை பிரதிவாதி ரூ.100 க்கு ரூ5 வீதம் வட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் அவர் வட்டி கொடுக்க முடியவில்லை என்பதால் 2021 ல் 2 ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவியிடம் வெத்து ரூ.100 பத்திரத்தில கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல. அதே போல் 2 ம் பிரதிவாதியிடம் பூர்த்தி செய்யப்படதாக 6 காசோலைகள் மற்றும் வெத்து பேப்பரில் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல. 05.02.2022 க்குள் பணம் கொடுக்கவில்லை என்றால் வெத்து காசோலைகளை வைத்து வெவ்வேறு நபர்கள் மூலம் வைத்து வழக்கு தாக்கல் செய்வேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. என்னுடைய மிரட்டல் காரணமாகத்தான் 2 ம் பிரதிவாதி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு தற்கொலையில் ஈடுபட்டார் என்றால் சரியல்ல. கந்துவட்டி ஒழிப்பு சட்டடத்தின் கீழ் தான் என் மீது வழககு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது பொய் வழககு. குற்ற வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்ட பின்புதான் நான் இந்த வழககுகளை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். குற்ற வழக்கில் இருந்து தப்பிதற்காக தான் பிரதிவாதிகளிடமிருந்து பெற்ற வெத்து புரோநோட்டுகளை வைத்து இந்த வழக்கை பூர்த்தி செய்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. புரோநோட்டுகளை திரும்ப கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கு உண்மையில் பிரதிவாதிகள் பணம் தரவேண்டியிருந்தால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றும் கந்துவட்டி சட்டத்தில் வழககு தாக்கல் செய்ததால் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமல் இந்த வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அடித்தல் திருத்தலோடு நான் தாக்கல் செய்த புரோநோட்டு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் அதன்படி எனது இரண்டு வழககுகளும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.